# பிற்கால இலக்கணங்களில் அலி எழுத்து

**முதுமுனைவர் கி. அய்யப்பன்**
கௌரவ விரிவுரையாளர்
தமிழ்த் துறை
உ. நா. அரசினர் கல்லூரி
பொன்னேரி-601204

எழுத்துகளைப் பாலின அடிப்படையில் பிரித்துப் பார்ப்பதில் இலக்கண ஆசிரியர்களிடையே காலந்தோறும் முரண்பாடுகள் இருந்து வந்திருக்கின்றன. அலிப்பாலுக்குரிய நிலையான எழுத்துக்களைஇலக்கண ஆசிரியர்கள் கட்டமைக்கவில்லை. சமூகத்தளம், மொழித்தளம் ஆகிய இரண்டிலுமே மாற்றுப்பாலினத்தவர்(Transgenter) குழப்பப்பட்டிருப்பதைப் பிற்கால இலக்கணங்கள் வெளிப்படுத்துகின்றன. பிற்கால இலக்கண நூல்களான பிங்கல நிகண்டு, வெண்பாப் பாட்டியல், பன்னிரு பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம், முத்து வீரியம், பொருத்த விளக்கம், அறுவகை இலக்கணம், தென்னூல் முதலியவற்றில் அலியெழுத்துக்கள் பற்றி பேசியுள்ளனர். அலியெழுத்துக்கள் பற்றி இலக்கண ஆசிரியர்களிடையே காணப்படும் முரண்பாடுகள் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்படுகிறன.

**பிங்கல நிகண்டு**

சோழர் ஆட்சிக் காலத்தில் 10-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண நூல். இந்நூலை பிங்கலம் என்றும் கூறுவர். திவாகர முனிவரின் மாணவர்களில் ஒருவரான பிங்கல முனிவரால் இந்நூல் இயற்றப்பட்டது. பிங்கல நிகண்டு பால்வகையைக் கூறுமிடத்து மூன்றாம் பாலாகிய அலிப்பாலைப் பதிவு செய்கிறது.

“எழுத்தெனப் படுபவை யாண்பெண் ணலியே”

(பிங்கல நிகண்டு, 6 ஆவது ஆடவர் வகை, பெயர்ப்பிரிவு, 1357)

ஆணெழுத்து - ஆண்பால், பெண்ணெழுத்து - பெண்பால், அலியெழுத்து - அலிப்பால் என்று பால்வகை அடிப்படையில் எழுத்தை மூன்றாக வரையறுத்துள்ளனர். பழைய இலக்கணக்காரர்கள் எழுத்துக்களை உயிர், மெய், உயிர்மெய், இடையினம், குறில், நெடில், ஆய்த எழுத்துகள் என்றே பகுத்திருக்கின்றனர். ஆனால் பிங்கல நிகண்டு ஆண், பெண், அலி எனப் பகுத்திருப்பது பழங்காலத்தில் இல்லாத ஒரு புதுமையாக உள்ளது.

உயிர் எழுத்துகள் பன்னிரெண்டும் ஆணெழுத்து என்றும், உயிர் எழுத்துகளும் மெய் எழுத்துகளும் சேர்ந்து வருகின்ற 216 உயிர்மெய் எழுத்துக்களும் பெண்ணெழுத்து என்று கூறும் பிங்கல நிகண்டு. அலி எழுத்தை கீழ் கண்டவாறு பதிவு செய்கிறது.

“ஒற்றெழுத் தெல்லா மலியெனப் படுமே”

(பிங்கல நிகண்டு, 6ஆவது ஆடவர் வகை, பெயர்ப்பிரிவு, 1360)

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டு எழுத்துக்களும் அலி எழுத்து என்று பிங்கல நிகண்டு பதிவு செய்கிறது. இதில்

கவனிக்கத்தக்கது ஒற்றெழுத்துக்கள் தனித்து இயங்காது, மொழி முதலில் வராது. ஒரெழுத்தொரு மொழிக்குள்ளும் வராது.

**வெண்பாப்பாட்டியல்**

கி.பி.12-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட இலக்கண நூலாகும். இதனை வச்சணந்திமாலை என்றும் வெண்பாப்பாட்டியல் என்றும் கூறுவர். இது பாட்டியல் நூல்களின் முதல் நூலாகக் கருதப்படுகிறது.

''எண்ணுங் குறிலா ணியைந்த நெடிலெல்லாம்
பெண்ணாகு மொற்றாய்தம் பேடாகும் - பெண்ணினோ
டாண்புணர்ச்சிக் கவ்வவ் வெழுத்தே மயங்கினுமா
மாண்பில்பே டென்றார் மதித்து''

(வெண்பாப்பாட்டியல், முதன் மொழியியல், பாற்பொருத்தம்: 7)

குற்றெழுத்துக்கள் ஆண்பாலாகும். நெட்டெழுத்துக்கள் பெண்பாலாகும். ஆய்தமும் மெய்யெழுத்தும் பேடு எழுத்துக்களாகும். ஆண் மீது பாடப்பெறும் நூலிற்கு ஆண்பால் எழுத்தும் பெண்மீது பாடப்பெறும் நூலிற்குப் பெண்பால் எழுத்தும் முதன்மொழியின் முதல் எழுத்தாய் அமைவது நலம். பால் மயங்கி வரினும் வரையப்படா, அலியெழுத்துக்களாகிய ஆய்தமும் மெய்களும் முதன்மொழியின் முதலெழுத்தாய் வராது என்று விளக்குகின்றது. பிங்கல நிகண்டு கூறாத ஆய்த எழுத்தை அலி எழுத்து என்று பதிவு செய்வது கவனிக்கத்தக்கது.

**பன்னிரு பாட்டியல்**

இது கி.பி. 14ஆம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண நூல்களில் ஒன்று. தமிழில் பாட்டியல் இலக்கண நூல்கள் பல உள்ளன. அவை வெண்பாப்பாட்டியல், பன்னிருபாட்டியல், நவநீதப்பாட்டியல், சிதம்பரபாட்டியல் என்பவைகளாகும்.

''ஒற்றும் ஆய்தமும் அலியெனப் படுமே''

(பன்னிருபாட்டியல், பால்: 28)

என்ற நூற்பாவில் ஒற்றெழுத்துக்களும், ஆய்த எழுத்தும் அலிப்பாலுக்குரிய எழுத்துக்களாகக் கூறப்பட்டுள்ளன. மேலும்,

''ஒற்றின் வருக்கம் மொன்பதிற் றிரட்டியும்
பெற்ற வாய்தமும் பேடெனப் படுமே''

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டு எழுத்துக்களும் ஃ என்ற ஆய்த எழுத்தும் பேடிப்பாலுக்குரிய எழுத்துக்களாகும்.

அலி, பேடு என்கின்ற எழுத்துக்களை அடையாளப்படுத்திய பன்னிருபாட்டியல். மேலும், 'நபுஞ்சகம்' என்ற புதுச்சொல்லாலும் மாற்றுப் பாலினத்தை அடையாளப்படுத்தியுள்ளது.

''உயிர் ராறு மாணென மொழிப
வுயிர்மெய் யெல்லாம் பெண்ணென மொழிப
வுடம்பெழுத் தெல்லா நபுஞ்சக மாகும்''

(பன்னிருபாட்டியல், பால்: 29)

என்கின்ற பொய்கையாரால் இயற்றப்பெற்ற சூத்திரம், மாற்றுப் பாலினம் குறித்த ஆழமான சிந்தனைக்கு வித்திடுகின்றது. தமிழிலுள்ள எழுத்துக்களை உயிர் எழுத்து, மெய்யெழுத்து,

உயிர்மெய் எழுத்து, ஆய்தயெழுத்து என்று பகுத்துள்ளனர். இதற்குள் மெய்யெழுத்தையும், ஆய்த எழுத்தையும் அலிப்பாலுக்குரிய எழுத்துக்கள் என்று விளக்கிக் கூறியுள்ளனர். ஆனால் பன்னிருபாட்டியல் 'நபுஞ்சகம்' என்கின்ற சொல்லால் மூன்றாம் பாலினத்தைக் கூறுவதோடு மட்டுமல்லாது நபுஞ்சகத்திற்குரிய எழுத்துக்களை 'உடம்பெழுத்து' என்பதாகச் சொல்லுகின்றது. உயிர் எழுத்துக்கள் பன்னிரெண்டையும் ஆண் எழுத்துக்கள் என்றும்; உயிர்மெய் எழுத்துக்கள் இருநூற்றி பதினாறு எழுத்துக்களையும் பெண்ணெழுத்து என்றும்; மெய்யெழுத்து பதினெட்டும், ஆய்த எழுத்து ஒன்றுமாகப் பத்தொன்பது எழுத்துக்களையும் உடம்பெழுத்துக்கள் என்றும் கூறுகின்றது. அதாவது க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன், ஃ முதலிய பத்தொன்பது எழுத்துக்களும் உடம்பெழுத்துகளாகும். ஏனைய இலக்கணங்களைக் காட்டிலும் பன்னிருபாட்டியல் மாற்றுப் பாலினத்தைக் நபுஞ்சகம் என்ற சொல்லாலும், அவர்களுக்குரிய எழுத்துக்களை உடம்பெழுத்து என்றும் கூறுகின்றது.

**நவநீதப் பாட்டியல்**

இவ்விலக்கண நூல் 14-ஆம் நூற்றாண்டில் நவநீத நடனாரால் இயற்றப்பட்டது. இந்திரகாளியர் வழி பாட்டியல் எனவும், அகத்தியர் வழி பாட்டியல் எனவும் இருவகை வழிகளில் பாட்டியல்கள் எழுந்துள்ளன. நவநீதப்பாட்டியல் அகத்தியர் பாட்டியல் வழிவகையைப் பின்பற்றியதாகும்.

"குற்றெழுத் தாடூஉ மகடூஉ நெடினல்ல வென்றுகொள்வர்
மற்றெழுத் தாமுயிர் மெய்க்குறி லாணெடில் அவ்வகையே
ஒற்றெழுத் தாய்த மலியென்று பாட்டின்முன் ஓதவொட்டார்
பொற்றொடிச் சிற்றிடைப் போர்வே ளயனப் புணர்முலையே"

(நவநீதப்பாட்டியல், பொருத்தவியல், பால்பொருத்தம்: 7)

பாலினப்பகுப்பு செய்யும்பொழுது மரபு வயப்பட்ட சொற்களைப் பயன்படுத்துகிறது. அதாவது ஆடூஉ, மகடூஉ என்று குறிப்பிடுகிறது. இவ்விரண்டு மரபுச் சொற்களும் ஆண், பெண் ஆகிய இருபாலினங்களுக்குரியதாகும். ஆனால், பால்மாறிகளை அலி என்றே நேரிடையாகப் பதிவு செய்துள்ளது. நவநீதப்பாட்டியல் பால் பொருத்த அடிப்படையில் ஆடூஉ பாலுக்குரிய எழுத்துக்களாகக் குற்றெழுத்துக்களையும், மகடூஉ பாலுக்குரிய எழுத்துக்களாக நெடில் எழுத்துக்களையும் பொருத்திக் கூறுகின்றது. அலிப்பாலுக்குரிய எழுத்துக்களாக ஒற்றெழுத்துக்களையும், ஆய்த எழுத்தையும் பொருத்திக் கூறியுள்ளது. அதாவது, க். ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன், ஃ ஆகிய பத்தொன்பது எழுத்துக்களும் அலிப்பால் எழுத்துக்களாகும்.

"பேடாகும் ஒற்றுக்கள் பெண்ணாம் உயிர்மெய்கள்
ஆடு வுயிரென் றறையலாம் — நாடுங்கால்
பெண்ணா மெழுத்தே பெருங்கவியின் முன்னெடுத்துக்
கண்ணாரக் காட்டல் கடன்"

"ஆண்பாற் புகழ்ச்சிக் காணெழுத் துரிய
பெண்பாற் புகழ்ச்சிக்குப் பெண்ணெழுத் துரிய
அவ்விரு பாற்கு மலியெழுத் தாகா
தம்முள் மயங்கினும் தவறின் றென்ப"

(நவநீதப் பாட்டியல், பருணர் பாட்டியல்: 7)

மேற் கண்ட நவநீதப் பாட்டியல் சூத்திரம் ஆடவன் ஒருவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவன் புகழப்படும் நூலின் முதன் மொழியில் ஆண் எழுத்துகளுள் ஒன்றும், பெண்ணொருத்தியைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு அவள் புகழ்பாடும் நூலின் முதன் மொழியில் பெண் எழுத்துகளுள் ஒன்றும் வரும் என்கிறது. ஆணோ பெண்ணோ

பாட்டுடைத் தலைமக்களாய்ப் பாடப்பெறும் நூலின் முதன் மொழியில் அலி எழுத்துகளுள் ஒன்று அமையுமாறு பாடப்பெறுவது குற்றம். ஆண்மீது பாடப்பெறும் நூலில் பெண்ணெழுத்தும் பெண்மீது பாடப்பெறும் நூலில் ஆண் எழுத்துமெனத் தம்முள் மயங்கி வருவதும் உண்டு. அவ்வாறு மயங்கி வருவது குற்றமன்று என்று கூறுகிறது.

ஆண், பெண், அலி எனும் முப்பாற்குரிய எழுத்துகளில் அலியெழுத்துகள் நூலின் முதன் மொழியின் முதலெழுத்தாக வராது என்பது மேற்கூறிய நவநீதப் பாட்டியலின் சூத்திர விதியின் கருத்தாகும்.

**சிதம்பரப் பாட்டியல்**

இவ்விலக்கண நூல் 16-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இந்நூலை சிதம்பர புராணம் என்னும் நூலை எழுதிய புராணத் திருமலை நாதர் என்பவரின் மகனார் பரஞ்சோதியார் எழுதியுள்ளார்.

"மருவுகுறில் ஆண்நெடில்பெண் அவர்இ வர்க்கா
மயங்கினும் ஆம் வரலாகா பேடு ஒற்று ஆய்தம்
உரியகச தநபமவ ஏசூழோடு ஆதி
உயிர்க்குறில் நான்கு இவை அமுதம் ஆதிச் சீர்க்கும்
அரியதசாங் கத்தயற்கும் நலமது ஆகும்
அமுதமொழிக்கு அல்லாத எழுத்தும் கால்மாத்
திரைஅளவுஅஃ கேனமுடன் மூன்றும் நஞ்சாய்ச்
செப்பும் எழுத்தும் இவைஎல்லாம் தீதாம் அன்றே"

(சிதம்பரப்பாட்டியல், பொருத்தவியல், பாலும் உண்டியும்: 20)

என்கின்ற நூற்பா பேடுப் பாலுக்குரிய எழுத்துக்களைக் கூறுகின்றது. சிதம்பரப்பாட்டியல் பாலின வகைகளை நேரிடையாகவே ஆண், பெண் என்று வகைப்படுத்திக் கூறுகின்றது. மரபுவயப்பட்ட சொற்களோ, புதுமையான சொற்களையோ பயன்படுத்தவில்லை. பாட்டியல் நூல்களில் ஒரே விதமான செய்திகளே கிடைக்கின்றன.

சிதம்பரப்பாட்டியல் குறில் எழுத்துக்களை ஆண்பாலுக்குரிய எழுத்துக்களாகவும் நெடில் எழுத்துக்களைப் பெண்பாலுக்குரிய எழுத்துக்களாகவும் பொருத்திக் கூறுகின்றது. ஒற்றெழுத்துக்களும், ஆய்த எழுத்தும் பேடுப்பாலுக்குரிய எழுத்துக்களாகச் சொல்லப்பட்டுள்ளது. முன்னே சொல்லப்பட்ட பதிவுகளே இப்பாட்டியல் நூலிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. மாற்றுப் பாலினரைப் பற்றி வேறுபட்ட புதுமையான பதிவுகள் இல்லை.

**இலக்கண விளக்கம்**

இவ்விலக்கண நூல் 17ஆம் நூற்றாண்டில் வைத்தியநாத தேசிகரால் இயற்றப்பட்டது. இதற்கு குட்டி தொல்காப்பியம் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இதில் அலியெழுத்து பற்றியும் பேசப்படுகின்றன.

"ஆடுஉக் குறில் நெடில் மகடூஉ
பேடுஒற்று ஆய்தம் பெண் ஆண் புணர்ச்சிக்கு
அவ்வெழுத்து மயங்கினும் அமையும் என்ப"

(இலக்கண விளக்கம்: பாட்டியல் நுவல்வன; 773)

இலக்கண ஆசியர்கள் மாத்திரை அடிப்படையில் எழுத்துக்களைக் குறில், நெடில், ஒற்று, ஆய்தம் என்று பகுப்பர். ஆண், பெண், பேடு எனும் வகைப்பாட்டை எழுத்துக்களுக்குப் பொருத்திப் பார்த்தனர். அந்த வகையில் இலக்கண விளக்கம் ஒற்றெழுத்துக்கும், ஆய்த எழுத்துக்கும் உரிய பாலாகப் பேடுவை அடையாளப்படுத்துகிறது.

**முத்துவீரியம்**

இவ்விலக்கண நூல் 19-ஆம் நூற்றாண்டில் முத்துவீர உபாத்தியாயரால் இயற்றப்பட்டதாகும். இது தமிழில் எழுதப்பட்ட ஐந்திலக்கண நூல்களுள் ஒன்று. இவ்விலக்கண நூலில் யாப்பதிகாரத்தில் உறுப்பியல் எழுத்துக்குரிய பாற்பகுப்பில் அலியெழுத்து பற்றிய பதிவுகள் உள்ளன.

'குறிலாண் நெடில்பெண் ணாந்தனி நிலைமெய்
அரியாம் பெண்ணினோ டாண்பாற் புணர்ச்சிக்
கவ்வவ் வெழுத்தே மயங்கினாம் வழுவே''

(முத்துவீரியம்; எழுத்துக்குரிய பால்பகுப்பு: 1031)

பால்பொருத்த அடிப்படையில் குறில் எழுத்துகள் ஆண் பாலாகவும், நெடில் எழுத்துகள் பெண்பாலாகவும், மெய்யெழுத்துகள் அலிப்பாலாகவும் கூறப்பட்டுள்ளன. பால்பொருத்தம் குறித்து பேசும் இலக்கண நூல்கள் பலவற்றிலும் அலிப்பாலுக்குரிய எழுத்துக்களாக ஆய்தத்தையும், மெய்யெழுத்துக்களையும் கூறுகின்றன. ஆனால் முத்து வீரியம் மெய்யெழுத்துகளை மட்டும் அலியெழுத்துகளாகக் கொள்கின்றது.

**பொருத்தவிளக்கம்**

19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண நூல். இந்த இலக்கண நூலை நாகூர் தர்கா மகாவித்துவான் ஸ்ரீலஸ்ரீ குலாம் காதிறு நாவலர் என்பவர் இயற்றியுள்ளார். ஆ.கா.பிச்சை இபுறாகிம் என்பவர் இந்த நூலுக்குப் பாயிரம் பாடியுள்ளார். 1880ல் அரங்கேற்றப்பட்ட இந்த நூல் 1900 ஆண்டில் செய்யது இபுறாகிம் என்பவரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. குற்றெழுத்துக்களை ஆண்பால் எழுத்துக்களாகவும், நெடில் எழுத்துகளை பெண்பால் எழுத்துகளாகவும் கொள்கிறார். அலியெழுத்தை அடையாளப்படுத்தும் போது

'ஆய்தமும் புள்ளியு மலியெனப் படுமே'

(பொருத்தவிளக்கம்: பால்:22)

ஆய்த எழுத்தும், க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய புள்ளியெழுத்தையும் அலியெழுத்து என்கிறார்.

''அலியக் கரமுதன் மொழிக்கமை யாது''

(பொருத்த விளக்கம்: பால்: 26)

என்ற நூற்பாவானது, தமிழ் மொழியிலுள்ள சொற்களில் 19 அலியெழுத்துகளும் முதலில் வராது. இது தமிழ் இலக்கணக்காரரர்களின் வரையறையாகும். இது இலக்கண மரபாகும். ஆனால் பிறமொழிச் சொற்களில் அலியெழுத்து மொழிக்கு முதல் வரும். உதாரணமாக ஃபேன், ப்ரியா, போன்றன.

**அறுவகை இலக்கணம்**

இவ்விலக்கண நூல் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளால் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது.

''வல்லினம் ஆணே மெல்லினம் பெண்ணே
இடையினம் அலியே என்பாரிடை சிலர்
குறில்நெடில் நடுவினைக் கூறலும் உளதே''

(அறுவகை இலக்கணம்; எழுத்திலக்கணம்: 94)

என்கின்ற நூற்பாவில் இடையினம் என்பதை அலியினம் என்று வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமி பதிவு செய்திருக்கிறார். தமிழ் எழுத்துக்களில் மெய்யெழுத்தை மூன்றாகப் பகுப்பர் இலக்கணக்காரர்கள். அவை வல்லினம் மெல்லினம் இடையினம் ஆகும். வலிமை கொண்டவர்கள் ஆண்களாகவும், மென்மை கொண்டவர்கள் பெண்களாகவும், இரண்டு தன்மைகளையும் கொண்டவர்களை இடையினமாகவும்(திருநங்கையர்) இலக்கியங்களில் வரையறுத்துக் கூறியுள்ளனர். மனித இனத்தைப் பால் அடிப்படையில் பிரிக்கும்பொழுது இடையினம் ஒன்று இருப்பதைக் காணமுடிகிறது. இதே அடிப்படையில் தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்களைப் பால் அடிப்படையில் இலக்கணக்காரர்கள் பகுத்துப் பார்க்கின்றனர்(முனிஷ், 2013: 71) என்றுகூறும் முனிஷின் கருத்தும் சிந்திக்கத் தக்கவனவாகும். இதுவரை பார்த்த நூல்களில் வண்ணச்சரபரின் கருத்து மாறுபட்டுள்ளதை அறியமுடிகிறது.

**தென்னூல்**

இவ்விலக்கணநூலை 1991-இல் பாவலரேறு ச. பாலசுந்தரம் எழுதியுள்ளார்.தமிழ் இலக்கண வரலாற்றில் மிகவும் பிற்காலகட்ட இலக்கண நூலாகத் தென்னூல் கருதப்படுகிறது.

ஆய்தமும் ஏரோவழி அவ்வியல் நிலையும்

(தென்னூல்; சொற்படலம்; நூற்பா.11)

பாலினப் பகுப்பை எழுத்துக்களிலும் பொருத்தி பார்த்துள்ளார். அப்பொருத்தப்பாட்டில் ஆய்த எழுத்தை அலியெழுத்தாகக் கொண்டுள்ளார்.

**நிறைவாக**

பிற்கால நூல்களில் அலியெழுத்துக்களை வரையறுத்துள்ளனர். அவ்வரையறையின்படி ஆய்த எழுத்து ஒன்று, மெய்யெழுத்துக்கள் பதினெட்டு என மொத்தம் பத்தொன்பது எழுத்துக்கள் அலியெழுத்துக்களாகும். ஆனால் முத்து வீரியமும், பிங்கல நிகண்டும், நவநீதப் பாட்டியலும் அவ்வாறு கூறவில்லை. மாறாக மெய்யெழுத்துகளை மட்டும் அலியெழுத்துகளாகக் கொள்கின்றது. இந்த மூன்று இலக்கணங்களும் ஒற்றெழுத்துக்களான க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டு எழுத்துக்களே அலியெழுத்துக்கள் என்கின்றது. இம்மூன்று இலக்கணங்களின் அலியெழுத்து வரையறையில் ஃ என்ற ஆய்த எழுத்து விடுபட்டுள்ளது. இம்மூன்று இலக்கண படைப்பாளர்கள் எந்த அடிப்படையில் அலியெழுத்துக்களைப் பகுத்தனர் என்பது தெளிவுபடவில்லை. அலியெழுத்துகளை பன்னிருபாட்டியல் 'உடம்பெழுத்து' என்கிறது. ஃ தவிர்த்த மற்ற பதினெட்டு எழுத்துக்களும் மெய்யெழுத்துக்களாகும் மெய் என்றால் உடல் என்று பொருள். மாற்றுப் பாலினத்தார் உடலியல் ரீதியாக மாற்றம் கொள்வதால் மெய்யெழுத்துக்களை அலியெழுத்துக்களாக வரையறுத்திருக்கலாம். மனித இனத்தில் தனிப்பட்ட குணாதிசயங்களைக் கொண்டவர்கள் என்பதால், எழுத்துக்களில் தனித்துவம் கொண்ட (ஃ) ஆய்த எழுத்தை அலியெழுத்தாக வரையறுத்திருக்கலாம். ஆக, பாட்டியல் நூல்கள் அலியெழுத்துக்கள் பத்தொன்பது என்கிறது. பன்னிரு பாட்டியலில் நபுஞ்சகம் எனும் சொல் மாற்றுப்பாலினரைக் குறிக்கும் சொல்லாக வந்துள்ளது. நபுஞ்சகம் என்பது வடமொழிச் சொல்லாகும். இதன் மூலம் அக்காலத்திய வடசொற்கலப்பைத் தெரிந்துகொள்ள முடிகிறது. அறுவகை இலக்கணம் இடையினம் என்கிறது.

மனித இனத்தில்தான் பாலினப்பகுப்பு நிறுவப்பட்டது. பின்னாளில் பாலினப்பகுப்புச் சிந்தனை மொழியமைப்பிலும் பொருத்திப் பார்க்கப்பட்டது. தூய தமிழ் மரபைப் பின்பற்றி எழுந்த இலக்கண நூல்களில் இனத்தில் மட்டுமே மாற்றுப் பாலினர் பார்க்கப்பட்டிருக்கின்றனர். மொழிக்கலப்பால் எழுந்த இலக்கணங்களில் இனம் - மொழி ஆகிய இரண்டிலும் பால்பகுப்பு சிந்தனையைக் கட்டமைத்துள்ளனர். இனம்-மொழி ஆகிய

இரண்டிலுமே "மாற்றுப் பாலினர்" குறித்த வரையறை குழப்பத்தைக் கொண்டுள்ளது. அவற்றில் தெளிவான வரையறை இல்லை. மனித இனத்தில் அடையாளப்படுத்துதல் சரியாக உள்ளது. அங்கீகரிக்கப்படுவதில் தான் தெளிவில்லை. மொழியமைப்பில் அடையாளப்படுத்துதல் அங்கீகரித்தல் என இரண்டுமே தெளிவாக இல்லை. பிற்கால தமிழ் இலக்கண நூல்களில் பாலின அடிப்படையில் எழுத்துக்களைப் பகுக்கின்றனர். அவற்றில் 'அலியெழுத்துக்கள்' என்று சில எழுத்துக்களை அடையாளப்படுத்தியுள்ளனர். அவ்வெழுத்துக்கள் இன்ன இன்னது என்று வரையறுப்பதில் பெருத்த முரண்பாட்டை இலக்கண ஆசிரியர்கள் கொண்டுள்ளனர். மனித இனத்தில் ஆண்-பெண்-அலி என்று மூன்று பாலினங்கள் உள்ளன. சமூகம், இலக்கியம் ஆகிய இருதளங்களில் அலியினத்தைத் தனியொரு பாலினமாகக் கொள்ளவில்லை என்பதை இக்கட்டுரையின் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. ஆனாலும் மூன்றாவது பாலினமாக அங்கீகரிக்கும் அளவிற்கு பிற்கால இலக்கண ஆசிரியர்கள் பேசியுள்ளனர்.

இன்னும் சொல்வதெனில் பக்தி இயக்க காலத்திற்கு பிறகு உருவான இலக்கண மரபே நிகண்டு, பாட்டியல் போன்ற இலக்கண மரபுகள். பக்தி இயக்ககாரர்கள் பலர் அலிப் பிறப்பை விதந்து பேசுகின்றனர். அதற்கான அங்கிகாரத்தை அதன் பிறகு உருவான இலக்கணக்காரர்கள் தர முயன்றனர். இப்பின்புலத்தில் இருந்து மேற்குறித்த செய்தியை விரிவாக ஆராய வேண்டியத் தேவையும் உள்ளது.

**துணை நின்ற நூல்கள்**

அரங்கராசன், மருதூர்., 1983, இலக்கண வரலாறு- பாட்டியல் நூல்கள், பாலமுருகன் பதிப்பகம், திருச்சி.
கண்ணன், இரா., 2004, நவநீதப் பாட்டியல், அப்பர் பதிப்பகம், சென்னை.
கண்ணன், இரா., 2005, வெண்பாப்பாட்டியல், அப்பர் பதிப்பகம், சென்னை.
கண்ணன்,இரா., 2004, பழம்பெரும் பாட்டியல்கள், அப்பர் பதிப்பகம், சென்னை.
கோவிந்தராச முதலியார், கா.ர.,1943, பன்னிருபாட்டியல், கழக வெளியீடு, சென்னை.
சுப்பிரமணியன், ச.வே., 2007, தமிழ் இலக்கண நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
சுப்பிரமணியன், ச.வே.,2008, பிங்கலநிகண்டு(முதல் தொகுதி), மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
சேயொளி.,1973, இலக்கண விளக்கம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், கழக வெளியீடு, சென்னை.
நாகராசன், ப. வெ., 1978, அறுவகை இலக்கணம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
முகிலை இராசபாண்டியன்(மற்றும் நால்வர்)., 2013, சமூக வரலாற்றில் அரவாணிகள், விசாலட்சுமி பதிப்பகம், விழுப்புரம்.
முனிஷ், வெ., 2013, காலந்தோறும் தமிழ் இலக்கணங்களில் மூன்றாம் பாலினம், சொல்லங்காடி, சென்னை.